

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP), நாமக்கல்

சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், துத்திகுளம் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே.எண்-**359 /1C,2C**-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான மனைகள் அமைப்பு தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லாத பகுதி)

அளவு : 1:400 (அ) 1"=33'0"

இணையதள விண்ணப்ப எண்: **WEI59WHR(15713 /2023-NKL)**

வ

I குறிப்பு:

(i) மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 2.56 ஏக்கர் (அ) 10359.96 சதுரமீ

(ii) சாலை மற்றும் மூலை மடக்குகளின் பரப்பு : 3194.73 சதுர.மீ

(iii) மனைப்பிரிவு எல்லை .....

(iv) உத்தேச சாலை .....

(v) நிலையில் உள்ள சாலை .....

(vi) கோரிய மனைகள் : 52

(vii) ஒதுக்கிய மனைகள் : 49 (EWS உட்பட)

II பொது ஒதுக்கீடுகள் :

உள்ளாட்சிக்கு மனுதாரரால் தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பூங்கா பரப்பு : 720.52 சதுர.மீ(10.06%)

சாலை மற்றும் மூலை மடக்குகளின் பரப்பு : 3194.73 சதுர.மீ

TNCD&BR 2019, 47(8)-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒப்படைக்கப்பட்ட மின்பகிர்மானம் மனையின் பரப்பு (HANDED OVER TO TANGEDCO) : 37.12 சதுர.மீ (0.52%)

ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு மனையின் பரப்பு (HANDED OVER TO LOCAL BODY) : 43.25 சதுர.மீ (0.60%)

விற்பனைக்குறியவை (EWS மனைகள்)

EWS மனை எண்கள் : EWS 8-12, 24-30, 38-41, 47-49

EWS மனைகளின் பரப்பு : 842.58 சதுர.மீ (11.76%)

சாலைகளின் பரப்பளவு பட்டியல்

1.	9.00மீ அகலசாலை	1 - 1	=	175.91 சமீ
2.	10.00மீ அகலசாலை	2 - 2	=	1051.95சமீ
3.	9.00மீ அகலசாலை	3 - 3	=	664.20சமீ
4.	9.00மீ அகலசாலை	4 - 4	=	664.50சமீ
5.	9.00மீ அகலசாலை	5 - 5	=	624.31சமீ
6.	1.52மீ x 1.52மீ மூலை மடக்கு 12 எண்ணம்		=	13.86சமீ
		மொத்தப்பரப்பளவு	=	**3194.73**சமீ

மூலை மடக்கு : 12.0மீ சாலை வரை 1.52மீx1.52மீ

III நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும்,எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பபடவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
2. அரசானை எண் 18, 16 -ன், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கள் துறை நாள் 4.2.2019 (ம) 31.01.2020-ன் படி விதிகள் அனைத்தும் பொருந்தும்.
3. அரசானை எண் 181 (ம) 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். 09.12.2020 மற்றும் 16.07.2022-ன் தெரு விளக்குகள், குடிநீர் வசதிகள் மற்றும் வடிகால் வசதிகள் உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவிற்குத் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர், அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6x4' அளவிலான தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
8. குறைந்த வருவாய் பிரிவினருக்கான EWS மனைகள் 8-12, 24-30, 38-41, 47-49 வரையிலான மனைகளை மனைஉட்பிரிவு / மனை ஒருங்கிணைப்பு / மனை உபயோக மாற்றம் செய்தல் கூடாது. மேலும் 10.00மீ அகல சாலையில் அமையும் EWS மனைகளுக்கு கட்டிட வரம்பு 1.00மீ பொருந்தும்.
9. மனையிடத்தின் ஊடே செல்லும் LT/HT கம்பியினை சாலையின் போக்கிற்கு மாற்றம் செய்துக் கொள்ள வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
11. உத்திரவு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் (ம) மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

Approval No:SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.12/2024.

ச. பிரபு சங்கர்	ச. சுரேந்திரன்	தேன்மொழி
அளவர் /உதவி வரைவாளர்	வரைவாளர் நிலை - III	மேற்பார்வையாளர்

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Namakkal
Date:2024.01.09 18:23:12

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்.